**செ. கு. எண்: 83** **நாள்: 31.05.2018**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு. எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின்
அறிக்கை – 31.5.2018

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கச்சநத்தம் கிராமத்தில் 25.5.2018 அன்று நடைபெற்ற கோவில் திருவிழாவிற்கு பிறகு, இரு சமூகத்தினரிடைய ஏற்பட்ட பிரச்சனையில், திரு. சண்முகநாதன் மற்றும் திரு. ஆறுமுகம் ஆகிய நபர்கள் உயிரிழந்தது எனக்கு மிகவும் துயரமும், மனவேதனையும் அளித்தது.

இந்த துயரச் சம்பவத்தில் உயிரிழந்த இரண்டு நபர்களுக்கு தலா பத்து லட்சம் ரூபாய் வழங்க, 29.5.2018 அன்று நான் ஆணையிட்டேன்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட நிவாரண நிதியுதவியை உயர்த்தி வழங்க வேண்டும் என என்னிடம் பலர் கோரிக்கை வைத்தனர்.

அவர்களது கோரிக்கையை ஏற்று, ஏற்கனவே உயிரிழந்த திரு. சண்முகநாதன், திரு. ஆறுமுகம் மற்றும் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி இன்று (31.5.2018) உயிரிழந்த திரு. சந்திரசேகர் ஆகியோரின் குடும்பத்தினரின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட, உதவியை உயர்த்தி, 8.25 லட்சம் ரூபாய் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையிலிருந்தும், 6.75 லட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண

நிதியிலிருந்தும், ஆக மொத்தம் **15 லட்சம் ரூபாய்** நிவாரண உதவி வழங்கவும், இந்த சம்பவத்தில், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 4 லட்சம் ரூபாய் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையிலிருந்தும், லேசான காயமடைந்தவர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட ஒன்றரை லட்சம் நிதி உதவியும் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K. பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**